# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.125/2013

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேசன் | மதம் | : இந்து |
| த/பெ | : துரைசாமி மந்தடி | ஜாதி | : -- |
| வயது | : 52 | கிராமம் | : சின்னகடம்பூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**11.01.2026**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி என்றால் சரிதான். வாதி முனிரத்தினம் நாயுடுவை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 6, 7, 8 பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு என்றால் வேலு எனது தம்பி, செங்கம்மா எனது தாயார், சாந்தி எனது சகோதரி ஆவார். 4ம் பிரதிவாதி துரைசாமி மந்தடி எனது அப்பா என்றால் சரிதான். என் அப்பா இறந்ததால் அவரது வாரிசுகளாக எங்களை சேர்த்தார்கள் என்றால் சரிதான். சொத்திற்கு பட்டா யார் பெயரில் கொடுத்தார்கள் என்றால் என் அப்பா பெயரில் கொடுத்தார்கள். அந்த பட்டா எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. 188/6 என்ற புல எண்ணிற்குதான் என் அப்பாவிற்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். எந்த வருடம் என் அப்பாவிற்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் 1983 ஆகும். நான் சொல்வது தவறு என்றாலும் 1994ல்தான் பட்டா அனைவருக்கும் கொடுக்கப்பட்டது என்றாலும் 1994ல் இரண்டாம் முறையாக பட்டா கொடுத்தார்கள். அதற்கு முன்பு பழைய பட்டா இருந்தது.

2. எனக்கு பட்டா எவ்வளவு விஸ்தீரணத்திற்கு கொடுத்தார்கள் என்றால் 33 அடி அகலம் நீளம் 70 அல்லது 72 ஆ என ஞாபகமில்லை. வாதி

முனிரத்தினம் நாயுடு 188/3ல் வீடு கட்டியுள்ளார் என்றால் ஆமாம். **(சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்)** வீடு கட்டவில்லை. மாட்டு கொட்டம்தான் கட்டியுள்ளார். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் முனிரத்தினம் நாயுடு 188/3ல் வீடு கட்டியுள்ளார் என்றாலும் 188/4ல் மாட்டு கொட்டம் கட்டியுள்ளார் என்றாலும் சரியல்ல. 188/4ன் பூரா விஸ்தீரணம் 37 செண்ட் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. வாதி முனிரத்தினம் பூர்வீகமாக அதே ஊர் என்றால் அவருக்கு அங்கு விவசாய நிலம் உள்ளது என்றாலும் சரிதான்.

3. தாவா சொத்தை வாதியின் பாட்டி சேஷம்மாள் கிரையம் வாங்கி அனுபவித்து வந்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த 37 செண்டில் மாட்டு கொட்டம் கட்டி ஆடு மாடு வளர்த்து அவர் அனுபவித்து வந்தார் என்றால் இல்லை. என் சொத்திற்கு அருகில் சின்ன கிருஷ்ணம்ம நாயுடு நிலமும் அரசாங்க நிலம்தான் உள்ளது. வாதிகள் தற்போதுதான் அங்கு வந்துள்ளார்கள். என் பட்டாவிற்கு அருகில் புல எண்.188/5ல் பட்டா கொடுக்கப்பட்டு யசோதம்மாள் உள்ளார் என்றால் ஆமாம். 188/5க்கும் 188/6க்கும் 188/4க்கும் இடையே அவற்றை பிரிக்க வரப்பு உள்ளது என்றால் இல்லை. அந்த வரப்பின் மீது வாதிகள் தென்னை மரம் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் அங்கு தென்னஞ்செடியே வைக்கவில்லை. தற்போதுதான் வைத்தார்கள். அங்கு வரப்பே இல்லை. நீதிமன்ற ஆணையர் வரப்பு சொத்தை பார்வையிடும்போது நான் அங்கு இருந்தேனா என்றால் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் வரப்பு, வரப்பில் உள்ள 2 தென்னை மரங்கள், தேக்கு, வேப்ப மரம், வைக்கோற்போர்வை ஆகியவை உள்ளது என்பதை குறிப்பிட்டுள்ளார் என்றால் இல்லை. காலியாகதான் உள்ளது.

4. மொத்த சொத்துக்களையும் அளவீடு செய்யும்போது வரப்பை தாண்டி வாதிகளின் சொத்தையும் என்னுடைய சொத்துக்களையும் சேர்த்து கிழமேல் 57 அடி தென்வடல் 14 அடி அளவுள்ள சொத்தை என் சொத்துடன் சேர்த்துவிட்டேன் என்றால் இல்லை. வழக்கு சொத்தான புல எண்.188/4 ஆனது

03.11.1977 மற்றும் 14.10.1977 பத்திரங்கள் மூலம் வாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் இல்லை. வாதியின் பாட்டி சேஷம்மாள் 15.04.1968லேயே வழக்கு சொத்தின் ஒரு பகுதியை உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் இல்லை. தாவா சொத்தின் பழைய புல எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. வழக்கு சொத்தின் பழைய புல எண்.16ல் SLR ல் வாதிகள் முன்னோர்கள் பெயர்தான் உள்ளது என்றால் அப்படி எந்த பெயரும் குறிப்பிடவில்லை. அது அரசாங்க இடம்தான்.

5. ஒரு நபர் முறையான அனுபவத்தில் இருக்கும்போது அரசாங்கத்திற்கு அந்த சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பட்டாதாரர்களின் அனுமதி இல்லாமலும் அவர்களை முறையாக வெளியேற்றாமல் வேறு நபர்களுக்கு பட்டா கொடுக்க முடியாது என்றால் RDO, தாசில்தார் வந்து பார்த்துவிட்டு அது அரசாங்கத்திற்கு சொந்தமான இடம் என்றும் நூலகம், விளையாட்டு மைதானத்திற்கு இடத்தை எடுத்து கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். பஞ்சாயத்து தலைவர்தான் இவ்வாறு சதி செய்துள்ளார் என்றாலும் முறையான அரசு உத்தரவு எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. எங்களுக்க கூடுதலாக கொடுக்கப்பட்ட பட்டா சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வாதி முனிரத்தினத்தின் வழக்கு பிராதுப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)